**கங்க இஹல கோரள பிரதேச சபை - 2022**
---------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கங்க இஹல கோரளபிரதேசசபையின் 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கங்கஇஹல கோரள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்ட 01 ஏக்கர் 03 ரூட் மற்றும் 05.26 பேர்ச் அளவிலான காணி ரூபா 9,993,990 ஆன மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கையேற்பதற்கு இணக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக ஒதுக்கீடு ஒன்றோ வெளிப்படுத்தல் ஒன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இக்காணியை கையேற்கும் நடவடிக்கைகளை சபைக்கு சொந்தமான நிலையான வைப்புக்களை பயன்படுத்தி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படுத்தப்பட வேண்டும் |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் கட்டிட நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 5,931,336 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சீராக்கம் செய்யப்படும் | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட ரூபா 1,000,000 ஆன சபையின் வாகன நிறுத்துமிடத்தின் பெறுமதி கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது கணக்கு களிலிருந்து அகற்றுவதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கழிவுப்பொருள் தொகுதியில் காணப்பட்ட ரூபா 249,328 பெறுமதியான இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது காணப்படும் இருப்பினை கணக்கீடு செய்வதாக | இருப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணம் மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 8,406,517 ஆன காணி மற்றும் கட்டிடங்களுக்காக உறுதியோ அல்லது கையளிப்பு கட்டளையோ சமர்ப்பிக்கப்படவிலலை. | நிதிக்கூற்றுக்களில் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | உறுதியோ அல்லது கையளிப்பு கட்டளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2008 பெப்ரவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரம் | காலாவதியான 35 சுற்றாடல் அனுமதி பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வப்போது கைத்தொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,491,762 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,703,146 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,435,115 | 3,394,445 | 3,767,931 | 1,637,821 | 4,859,095 | 3,683,941 | 3,447,840 | 2,011,308 |
| (ii) | வாடகை | 19,903,000 | 8,459,778 | 8,553,949 | 1,324,701 | 6,293,000 | 8,411,196 | 7,969,831 | 1,418,872 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,175,100 | 1,161,658 | 760,358 | 1,430,700 | 1,185,100 | 1,053,250 | 811,550 | 1,029,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 40,937,500 | 56,326,332 | 46,110,238 | 34,617,301 | 34,849,500 | 31,827,434 | 31,472,016 | 24,301,207 |
| | மொத்தம் | 66,450,715 | 69,342,213 | 59,192,476 | 39,010,523 | 47,186,695 | 44,975,821 | 43,701,237 | 28,760,787 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த வருமான மூலங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 28,760,787 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 39,010,523 ஆக இருந்த காரணத்தினால் நிலுவை வருமானமங்களில் அதிகரிப்பு 36 சதவீதமாகும். | முறையான திட்டமொன்றின் பிரகாரம் வருமானத்தை அறவிடும் செயற்பாடுகளை மேற்கொள்வதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதிகளின் மொத்தம் ரூபா 1,398,646 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்காக பெறவேண்டிய | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானம் குறித்த காலப்பகுதியில் அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதி ரூபா 665,312 தொகை மற்றும் 05 ஆண்டுகளை மிகைத்த பெறவேண்டிய வீதவரி மீதி ரூபா 276,373 ஆக காணப்பட்டது. | | |

**(இ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை் ரூபா 101,624 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 15,563 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 72,258 ஆக காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை தொகை அறவிடப்படல் வேண்டும் |

**(ஈ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை் கடை வாடகை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,324,701 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 523,355 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 170,996 ஆக காணப்பட்டது. | கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடை வாடகை அறவிடப்படல் வேண்டும் |

**(உ) முச்சக்கர வண்டிக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முச்சக்கர வண்டிக் கட்டண நிலுவை மீதி பெறுமதி ரூபா 1,304,700 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 373,800 ஆகவும் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 843,800 தொகையும் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 87,100 ஆக காணப்பட்டது. | முச்சக்கர வண்டிக் கட்டண நிலுவையில் ரூபா 16,200 அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானத்தை அறவிட் வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,378,284 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 33,004,000 ஆகவும் இருந்தது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெற்றுக கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | பிரதேச சபையால் பேணிச் செல்லப்படுகின்ற 08 செயற்திட்டங்கின் நீர் மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் அதன் மூலம் பிரதேச மக்களின் சுகாதார தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | 03 செயற்திட்டங்கின் நீர் பரிசோதனை மேற் கொள்ளப்படா திருந்ததுடன் மாதிரிகளைப் பரிசோதிக்குமாறு சன சமூக நிலையங் களுக்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது | நீர் மாதிரிப் பரிசோதனைகளை மேற்கொண்டு பொது மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய குருந்துவத்தையிலுள்ள 29 கடைகள் உடன்படிக்கை செய்யப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததால் நிலுவை வாடகை அறவிடுவது மற்றும் சட்ட ரீதியாக நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் சிக்கலான நிலைமை ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப உரிமையாளர் களை கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் இன் கடைகளுக்காக உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக உடன்படிக்கை செய்யப்பட வேண்டும. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 14,024,328 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை கடந்திருந்த ரூபா 6,539,297 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 96,829 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | ரூபா 3,184,952 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,181,200 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 9,463,330 ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 125,894 ஆக இருந்தது. | செலுத்த வேண்டியுள்ள பணத்தை விரைவில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்யப்படல் வேண்டும் |
| (ஈ) | அசுப்பினி அல்ல சுற்றுலாத் திட்டம் மற்றும் பிரதேச சபை கட்டிடத்தின் ஒரு பகுதியை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 11,006,088 செலவிடப்பட்டிருந்த போதும் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாதிருந்தது. | நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை என்பதாலும் குறைந்த வருமானத்தை பெறும் சபையாக இருப்பதாலும் 40 இலட்சம் ஈடுபடுத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாத இருந்ததாக | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல்** | | |
| அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 180 கிணறுகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கிணறுகளை இனங் காண்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் இனங் காணப்பட வேண்டும் |
| **(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபை பயன்படுத்தப்படும் ஜீப் வண்டி ஒன்று சபையின் பேரின் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தனமையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் சமர்செட் கொரோனா சிகிச்சை நிலையம் 2022 மார்ச் 25 ஆம் திகதி செயற்பாடுகள் முடிவடைந்த உடன் இந்த நிலையத்திற்கு வெவ்வேறு நிறுவனங்களில் இருந்து நன்கொடையாக கிடைத்த 297 கட்டில்கள் மற்றும் பாகங்கள், 301 பிளாஸ்டிக் கதிரைகள் 23 மர ஸ்டூல்கள் 4 தொலைக்காட்சிகள் மற்றும் உப பாகங்கள் மற்றும் 03 சலவை இயந்திரங்கள், 08 உணவு மேசைகள் மின்பிறப்பாக்கியொன்று, 63 | இந்த வைத்திய சாலைக்கு கிடைத்த அனைத்து பொருட் களையும் பதிவேடு களுக்கு உட்படுத்துதல் பிரதேச செயலகத்தினால் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலை | பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் வழங்குதல் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

| | |
|---|---|
| மின்விசிறிகள், 16 CCTV கேமராக்கள், 7 நீர் மோட்டார் பம்பிகள், 07 பிளாஸ்டிக் நீர் தாங்கிகள், 7 நீர் வடிகட்டிகள் குளிர்சாதனப் பெட்டி உட்பட உபகரணங்கள் 2022 மார்ச் 25 கங்கஇஹல கோரள பிரதேச செயளலாளரினால், கங்கஇஹல கோரள பிரதேச சபைத் தலைவருக்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டு இருந்தது. எனினும் 2023 மார்ச் 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அந்த எந்த ஒரு உபகரணங்களும் ஆவணங்களுக்கு உட்படுத்தப் படா திருந்ததுடன் அந்த உபகரணங்களை வழங்கிய நிறுவனம் ஒன்றோ பௌதீக பரிசோதனைக்காக முன்வைக்கப்படவில்லை | மூடப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளரால் சபையின் தலைவருக்கு அனைத்து பொருட்களும் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டுள்ளன. |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) ஜயமாலபுற 08 ஆம் ஒழுங்கை திரு.இந்திக்க அவர்களின் வீட்டுக்கருகில் செல்லும் வீதி அபிவிருத்தி ரூபா 541,377 | | |
| i. 2021 மார்ச் 17 ஆம் திகதி SMRR/PL/01/Cir ஆம் இலக்க பெருந்தெடுக்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயற் திட்டங்களை தெரிவு செய்யும் போது குறுக்கு வீதிகள் அதிக அளவில் நுழைவு உடன் கூடிய அதிக எண்ணிக்கையான குடும்பங்களுக்கு நலன்களை வழங்கக்கூடிய வீதிகள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் இவ்வீதி வேறொரு வீதிக்கு நுழைவு வீதியாக அல்லாததால் 04 நலனாலிக் குடும்பங்களுக்கு மாத்திரம் குடியிருப்பு வீதி ஒன்றாக அவதானிக்கப்பட்டது. | இவ்வீதி பொது வீதி ஒன்றாகவும் எதிர்காலத்தில் நலன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நோக்கில் இவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முன்னுரிமை எண்ணிக்கை யிலான வீதிகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் |
| ii. மரங்களை நடுவதற்காக ரூபா 10,000 பட்டியலிடப்பட்டிருந்த போதும் வீதியின் இரு மரங்கிலும் மரங்கள் நடப்பட்டிருக்கவில்லை. | வீதிக்குரிய மரங்கள் உலப்பன டென்மார்க் கழிவுத்தொகுதி அமைந்துள்ள இடத்தில் நடப்பட்டுள்ளன. | மதிப்பீட்டின் படி செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| **(ஆ) மலங்கமுவ முதல் கலாஹேன வரை வீதி அபிவிருத்தி - ரூபா 890,434** | | |
| i. வீதி 106.9 மீற்றர் தூரத்திற்கு நிர்மாணிக்கப் பட்டதாக மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பரிந்துரைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனை போது 100.8 மீற்றர் தூரத்துக்கு மாத்திரம் கொங்கிரீட் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதால் 6 மீற்றர் கொங்கிரீட் பரப்பாமல் 2.2 கன மீற்றருக்காக ரூபா 50,289 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் 10 சதவீத வைப்புத் தொகையிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கொடுப்பனவைப் பரிந்துரைத்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | மரங்களை நடுதல் மற்றும் பெயர் பலகையைப் பொருத்துவதற்காக ரூபா 10,000 வீதம் ரூபா 20,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மரங்கள் நடப்பட்டோ பெயர் பலகை பொருத்தப்பட்டோ இருக்கவில்லை. | இவ்வீதிக்குரிய மரங்கள் உலப்பன டென்மார்க் கழிவுத் தொகுதி அமைந்துள்ள இடத்தில் நடப்பட்டுள்ளன. | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்பட வேண்டும் |
| **(இ)** | **கங்கா இஹல வர்த்தகத் தொகுதி நிர்மாணம் - ரூபா 74,612,900** | | |
| i | இந்த வியாபாரத் தொகுதியை நிர்மாணிக்கும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாக இருந்த போதும் காணியை கையேற்காமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்ததன் பின்னர் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணி கையேற்கப்பட வேண்டும் |
| ii. | கட்டிட நியம விகித பகுப்பாய்வின் விகிதங்கள் (BSR) மற்றும் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலைகளுக்கு இடையே 18 வேலை விடயங்களில் 75 சதவீதம் முதல் 866 சதவீதம் வரையான விலகல் காணப்பட்ட காரணத்தினால் ரூபா 5,326,627 தொகைக்கு கூடுதலான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் பொறியியலாளர் மதிப்பீட்டை விட கூடுதலான பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். என தெரிவிக்கப்பட்டு இருந்த போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | திணைக்கள விலை விபரங்களுடன் இணங்கி அதன் மீது ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | நிர்மாண ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி 10 மாத காலப்பகுதியில் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டு மீளாய்வாண்டின் நவம்பர் 14 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் மேலும் 03 மாதங்களுக்கு, காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அக்காலப் பகுதி 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி முடிவடைந்த போதும் கட்டிடத்திற்கான அத்திவாரம் வரை மாத்திரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | பொருட்களின் சந்தை விலை அதிகரித்தமை மற்றும் சந்தையில் காணப்பட்ட பொருட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் ஒப்பந்தத்தை உரிய திகதியில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**
**நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் 10 இனங் காணப்பட்டிருந்த போதும் 08 இலக்குகளுக்காக எந்தவொரு தொகையும் செலவு செய்து செயற்படுத்தியிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக | நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |